அறிவிக்கை எண் – 01 /2017

# தமிழ்நாடு அரசு
# பட்டு வளர்ச்சித்துறை

## <u>நேரடி நியமனம் மூலம் உதவி பட்டு ஆய்வாளர் பணியிடம் நிரப்புவதற்கான அறிவிக்கை</u>

தமிழ்நாடு பட்டு வளர்ச்சித்துறையில் தமிழ்நாடு தொழிற்சார்நிலைப் பணியின் கீழ்வரும் உதவி பட்டு ஆய்வாளர் பணி காலியிடங்களுக்கு 2017–18 ஆம் ஆண்டில் கீழ்வரும் விபரப்படி நேரடி நியமனம் மேற்கொள்ளப்பட உள்ளது. இப்பணியிடங்களுக்கு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்களை பட்டு வளர்ச்சித்துறை **இணையதளத்திலிருந்து** (www.tnsericulture.gov.in) பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

| பதவியின் பெயர் | மொத்த பணியிடங்கள் | ஊதிய விகிதம் |
|---|---|---|
| உதவி பட்டு ஆய்வாளர் | 13 | ரூ.9300 – 34800 + தர ஊதியம் ரூ.4200 |

### <u>1) காலியிட ஒதுக்கீடு</u>

இனவழிச் சுழற்சி விதிகளின்படி கீழ்க்கண்டவாறு காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

**உதவி பட்டு ஆய்வாளர் பணி காலியிடங்கள் :**

| இனம் | | பொது | பெண் | (தமிழ் வழி) | முன்னாள் இராணுவத்தினர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| பொதுப் போட்டி (GT) | முன்னுரிமை பெற்றவர் | 1 | | | | 1 |
| | முன்னுரிமையற்றவர் | 1 | 2 | | | 3 |
| பிற்பட்ட வகுப்பினர் (BC) | முன்னுரிமை பெற்றவர் | 1 | | | | 1 |
| | முன்னுரிமையற்றவர் | 2 | 1 | | | 3 |
| மிகவும் பிற்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் (MBC & DNC) | முன்னுரிமை பெற்றவர் | | | | | 0 |
| | முன்னுரிமையற்றவர் | 1 | | 1 | | 2 |
| ஆதி திராவிடர் (SC) | முன்னுரிமை பெற்றவர் | 1 | | | | 1 |
| | முன்னுரிமையற்றவர் | | | | 1 | 1 |
| ஆதி திராவிடர் (அருந்ததியர்) (SCA) | முன்னுரிமை பெற்றவர் | | | | | 0 |
| | முன்னுரிமையற்றவர் | 1 | | | | 1 |
| **மொத்தம்** | | **8** | **3** | **1** | **1** | **13** |

**2) தகுதிகள்**

**அ. வயது (01. 07.2017 அன்றைய தேதியில்)**

| வ. எண் | விண்ணப்பதாரர்கள் இன வகைகள் | குறைந்த பட்ச வயது (முடிவடைந்திருக்க வேண்டும்) | அதிகபட்ச வயது |
|---|---|---|---|
| 1) | ஆ.தி., ஆ.தி. (அ), பழங்குடியினர் மற்றும் ஆதரவற்ற விதவைகள் | 18 வயது | உச்ச வயது வரம்பு இல்லை |
| 2) | மி.பி.வ./ சீ.ம., பி.வ. மற்றும் பி.வ. (முஸ்லீம்) | | |
| 3) | ஏனைய வகுப்பினர் (மேற்குறிப்பிட்ட பிரிவினர் தவிர) | | 30 வயதுக்குள் |

* மாற்றுத்திறனாளிகளுக்கு வயது வரம்பு சலுகைகளுக்கு நடைமுறையிலுள்ள அரசு ஆணை எண் (நிலை) 704, பொதுத் (சிறப்பு –எ) துறை, நாள் 10.04.1964 பொருந்தும்.

**ஆ. கல்வித் தகுதி மற்றும் இதர தகுதிகள் ( 05.08.2017 அன்றைய தேதியில்)**

| பதவி | கல்வித்தகுதி |
|---|---|
| உதவி பட்டு ஆய்வாளர் | பல்கலைக் கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் மூலம் வழங்கப்பட்ட பட்டு வளர்ப்பை முதன்மை பாடமாக கொண்ட இளம் அறிவியல் பட்டப்படிப்பில் (B.Sc., Sericulture ) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |

**3) முக்கிய தேதிகள் :**

| | | |
|---|---|---|
| அறிவிக்கை நாள் | : | 05.08.2017 |
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தில் கிடைக்கப்பெற வேண்டிய கடைசி நாள் | : | 19.08.2017 பிற்பகல் 5.45 மணி வரை. |
| தேர்வு நடைபெறும் நாள் | : | 10.09.2017 |

**4) விண்ணப்ப கட்டணம்**

விண்ணப்ப கட்டணமாக ரூ.200/– (ரூபாய் இருநூறு மட்டும்) செலுத்தப்பட வேண்டும். விண்ணப்பதாரர்கள் அனைவரும் விண்ணப்பக் கட்டணம் செலுத்த வேண்டும். விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து எந்த இனத்தை சார்ந்தவர்களுக்கும் விலக்கு அளிக்கப்படமாட்டாது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை அலுவலகத்திலிருந்து பரிந்துரை செய்யப்படும் நபர்களும் பட்டு வளர்ச்சித்துறை **இணையதளத்திலிருந்து** (www.tnsericulture.gov.in) விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து, ரூ.200/– (ரூபாய் இருநூறு மட்டும்) விண்ணப்ப கட்டணத்துடன் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

விண்ணப்பக்கட்டணம் "இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை" (Director of Sericulture) என்ற பெயரில் சேலத்தில் மாற்றத்தக்க வகையில் ரூ.200/– க்கான வங்கி வரைவாக செலுத்தப்பட வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை, வங்கி வரைவுடன் இணைத்து **'இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை, அஸ்தம்பட்டி, சேலம் – 636 007'** என்ற முகவரிக்கு பதிவஞ்சலில் அனுப்ப வேண்டும்.

## 5) தேர்வு செய்யப்படும் முறை

1) தேர்வு இரு கட்டங்களாக நடைபெறும். அதாவது

அ) எழுத்துத் தேர்வு.

ஆ) வாய்மொழித்தேர்வு என்பது நேர்முகத் தேர்வாக நடைபெறும். இந்நேர்முகத்தேர்வு இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை, சேலம் அலுவலகத்தில் நடைபெறும்.

இ) எழுத்துத் தேர்வில் பெறப்பட்ட மதிப்பெண்களின் அடிப்படையில் வாய்மொழித் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

ஈ) எழுத்துத் தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வில் பெற்ற மொத்த மதிப்பெண்களின்படி இனவழிச் சுழற்சி, இட ஒதுக்கீடு (Rule of Reservation) மற்றும் முன்னுரிமை (Priority) தொடர்பான விதிகளின் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் இறுதியாக தேர்வு செய்யப்படுவர்.

உ) தேர்வு மைய விபரம் மற்றும் தேர்வு நேரம் ஆகிய விபரங்கள் தேர்வு மைய நுழைவு சீட்டில் தெரிவிக்கப்படும்.

## 6) பொதுவான தகவல்கள்

1) பணியிடங்களை நிரப்ப இனவழிச் சுழற்சி விதிகள் கடைப்பிடிக்கப்படுகிறது. காலிப்பணியிட ஒதுக்கீடு தற்போதுள்ள விதிகளின்படி அமைகிறது.
2) தமிழ்வழிக் கல்வி இட ஒதுக்கீட்டின்கீழ் பயனடைய விரும்பும் விண்ணப்பதாரர்கள் தாங்கள் பயின்ற கல்வி நிலையத்தின் தலைவரிடமிருந்து இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதியைத் தமிழ்வழியில் பயின்று பெற்றார் என்பதற்கான சான்று பெற்றுச் சமர்ப்பித்தல் வேண்டும். தமிழ்வழிக் கல்வியில் பயின்றோர்க்கு அதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள காலிப்பணியிடங்களை நிரப்ப தேர்வு செய்வதற்கான தகுதியான விண்ணப்பதாரர்கள் கிடைக்காத பட்சத்தில் தமிழ்வழியில் பயிலாத தகுதியான சம்மந்தப்பட்ட இனப்பிரிவைச் சார்ந்த விண்ணப்பதாரர்களைக் கொண்டு அக்காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்.
3) அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை தோராயமானதாகும். தெரிவு நடைபெறுவதற்கு முன்புவரை காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை மாறுதலுக்குட்பட்டதாகும்.
4) அடிப்படைத்தகுதிகள், கல்வித்தகுதி, இதரத்தகுதிகள், கட்டணம், வயது, இனம் மற்றும் சாதி குறித்து விண்ணப்பத்தில் தவறான தகவல்கள் அளிக்கப்பட்டிருந்தால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
5) விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட விவரங்களுக்கான மூலச்சான்றிதழ்கள் நேர்முக தேர்வின்போது சமர்பிக்க வேண்டும். நேர்முக தேர்வின்போது மூலச்சான்றிதழ்களை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர்கள் நேர்முக தேர்விற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
6) விண்ணப்பதாரர்கள் தாங்கள் கோரும் இணைக்கல்வி தகுதிக்கான அரசாணை ஏதேனும் வைத்திருப்பின் அதை விண்ணப்பத்துடன் பதிவேற்றம் செய்ய வேண்டும். மேலும், இவ்வலுவலகம் மூலம் கோரப்படும் தருணத்தில் அதனை சமர்ப்பிக்க வேண்டும்.
7) அஞ்சல் உறையின் முகப்பில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.
8) தேர்வு நுழைவுச்சீட்டு அனுப்புவதற்காக விண்ணப்பத்துடன் தனியாக பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒன்று இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
9) எக்காரணம் கொண்டும் விண்ணப்பக் கட்டணம் திருப்பி தரப்படமாட்டாது.
10) அரசு சார்ந்த துறைகளில் பணிபுரிந்துவரும் பணியாளர்கள் நேர்முக தேர்வுக்கு தகுதிபெற்றால் சம்மந்தப்பட்ட அலுவலகங்களிலிருந்து தடையின்மை சான்று பெற்று சமர்ப்பிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் நேர்முக தேர்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

7) <u>விண்ணப்பதார்களுக்கான அறிவுரைகள்</u>

1) எழுத்துத் தேர்வின்போது விண்ணப்பதாரர் தன்னுடன் பேஜ்ர் (Pager), கைபேசி, கால்குலேட்டர் மற்றும் மின்னணு ஞாபகக் குறிப்புகள், புத்தகங்கள், மற்றையவை அல்லது எந்தவொரு மின்னணுக் கருவி அல்லது மின்னணுப் பதிவு இயந்திரம் தனியாகவோ அல்லது விண்ணப்பதாரர் பயன்படுத்தும் கைக்கடிகாரம் அல்லது வளையம் போன்றவற்றின் பகுதியாகவோ உள்ளதைக் கொண்டுவர அனுமதிக்கப்பட மாட்டாது.

2) மேற்கண்டவற்றில் ஏதேனும் ஒன்றை விண்ணப்பதாரர்கள் தங்களுடன் வைத்திருப்பது கண்டறியப்பட்டால் அவர்கள்தொடர்ந்து தேர்வெழுத அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், அவர்களது விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது மற்றும் / அல்லது தேர்விலிருந்து விலக்கி வைக்கப்படுவார்கள். தேவை எனில், அவ்விடத்திலேயே உடல் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவார்கள்.

3) விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்ட அனுமதிக்கப்படாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ள கைபேசி உள்ளிட்டவற்றைத் தாங்களே முன்வந்து எடுத்து வரவேண்டாம் எனத் தெரிவிக்கப்படுவதுடன் தேர்வு அறைக்கு வெளியில் வைத்திருக்கும் பட்சத்திலும் அவற்றின் பாதுகாப்புக்கு எவ்விதத்திலும் உறுதி வழங்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

4) தேர்வாளர்கள் பக்கத்தில் உள்ளவரது விடைத்தாளை பார்த்து எழுதவோ அல்லது தனது விடைத்தாளைப் பார்த்து, பிறர் எழுத அனுமதிக்கவோ, அல்லது பரிமாறிக்கொள்ளவோ, அல்லது வாங்கவோ அல்லது அதுபோன்ற தவறான எவ்விதமான உதவி பெற முயலவோ கூடாது.

5) இவ்வலுவலகம் மூலம் அனுப்பிவைக்கப்படும் தேர்வுமைய நுழைவுச்சீட்டினை கண்டிப்பாக எழுத்து தேர்வின்போது எடுத்து வரவேண்டும். தேர்வு மைய நுழைவுச்சீட்டு இல்லாத விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**இயக்குநர்**
**பட்டு வளர்ச்சித்துறை.**

## மாற்றுத் திறனாளிகளுக்கான இட ஒதுக்கீடு விபரம்

**உதவி ஆய்வாளர்**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் (நிபந்தனை மற்றும் பணி) சட்டம் 2016 அட்டவணை – VI பிரிவு 27 (b) க்கு வழங்கப்பட்ட திருத்தத்தின்படி பொதுப்பிரிவில் (முன்னுரிமையற்றோர்) ஒரு பணியிடம் பெண் காதுகேளாதோர் மற்றும் குறைவான கேட்கும் திறன் உள்ளவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இயக்குநருக்காக
பட்டு வளர்ச்சித்துறை